6 சண்டேசுர நாயனார்

சோழ நாட்டிலே, மண்ணியாற்றின் கரையில் திருச்சேய்ஞலூரில் வாழ்ந்த எச்சதத்தன், பவித்திரை என்போருக்கு மகனாக விசாரசருமர் பிறந்தார். அவர் இளமையிலேயே சிவபக்தி உள்ளராக இருந்தார். ஒருநாள், இடையன் ஒருவன் பசுக்களை மேய்ப்பதற்காக, அவற்றை மண்ணியாற்றங்கரைக்கு ஓட்டிச் சென்றான். வழியில் அவனது பசு ஒன்று அவனை முட்டியதால் சினங் கொண்டு, அப்பசுவைப் பெரிய தடியினால் அடித்துத் துன்புறுத்தினான். பசுக்கள் தெய்வ வடிவானவை. அவை போற்றிப் பாதுகாக்க வேண்டியவை என்பதை அறிந்திருந்த விசாரசருமர் அச்செயலைக் கண்டு மனம் வருந்தி, அவனிடமிருந்து பசுக்களை மேய்க்கும் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்டார்.

விசாரசருமர் அன்புடனும், ஆதரவுடனும், மிகுந்த கவனத்துடனும் பசுக்களைப் பராமரித்து வந்தார். பசுக்கள் முன்னரை விட அதிகளவு பாலைக் கொடுத்தன. விசாரசருமர் நாடோறும் பசுக்களை ஊருக்குப் பக்கத்திலே உள்ள மண்ணியாற்றங் கரையில் மேயவிட்ட பின்னர், அங்கு மணலால், சிவலிங்கம் அமைப்பார். ஆத்தி மலரையும், வேறு நல்ல மலர்களையும் எடுப்பார். பின்னர் குடங்களில் பசுக்கள் தாமே சொரிந்த பாலை எடுத்து, சிவலிங்கத்துக்கு அபிடேகம் செய்து, மலர்களினாலே அருச்சனை செய்து பக்தியுடன் சிவபூசை செய்வார்.

அவர் அவ்வாறு தினமும் செய்வதைக் கண்ட ஊரவர், அதனை எச்சதத்தனுக்குத் தெரிவித்தனர். எச்சதத்தன் அதன் உண்மையை அறிவதற்காக, அடுத்த நாள் விசாரசருமருக்குத் தெரியாமல், மண்ணியாற்றங் கரைக்குச் சென்று, ஒரு மரத்தின் பின்னால் மறைந்திருந்து பார்த்தார்.

விசாரசருமர் வழக்கம் போலப் பசுக்களை மேயவிட்ட பின்னர், சிவபூசை செய்யத் தொடங்கினார். மணலினாலே சிவலிங்கத்தை அமைத்தார். மலர்களைக் கொண்டு வந்தார். அதன் பின் வழமைபோல, சிவலிங்கத்துக்குப் பால் சொரிந்து சிவபூசையில் ஈடுபட்டார். எச்சதத்தன், அதனைக் கண்டு மிகுந்த கோபங்கொண்டு, அவர் முன் சென்று கடுஞ்சொற்களைக் கூறி, பாற்குடங்களைக் காலால் இடறி, அவரது சிவபூசைக்கு இடையூறு செய்தார். தனது பூசைக்குத் தடைவந்தபோது விசாரசருமர் உலகநினைவு வரப்பெற்றார். சிவபூசைக்கான பாற் குடங்களை உருட்டி, இடறிய தன் தந்தையின் காலைச் சிறுதடியால் அடித்தார். அது மழுவாக மாறி தந்தையின் காலை வெட்டியது.

தனது தந்தையே ஆயினும், சிவ வழிபாட்டிற்கு இடையூறு செய்ததால் அவரும் தண்டிக்கத்தக்கவரே என்னும் தீவிரபக்தி உணர்வுடனும், உறுதியுடனும் விசாரசருமர் இருந்தார். அவரது பக்தியால் மகிழ்ந்த சிவபெருமான், உமையம்மையாருடன் காட்சி அளித்தார். அவரது சிவபக்தியின் மேன்மையை வியந்து, சிவதொண்டருக்கெல்லாம் மேலான தலைவராகி, திருக்கோயில்களில் சிவவழிபாட்டின் பயனைக் கொடுக்கும் உயர்ந்த சண்டேசுர பதவியை, அவர் பெறும்படி அருள் செய்தார். இறைவன் தாமே தமது முடிமேலிருந்த கொன்றை மாலையை எடுத்து விசாரசருமருக்குச் சூட்டினார். எச்சதத்தன் தண்டனை பெற்றதனால், சிவத்தீவினை செய்த குற்றம் நீங்கப்பெற்று சிவலோகத்தை அடைந்தார்.

சிவபூசை செய்தலாகிய கிரியைநெறி வழிபாட்டோடு, பசுக்களைப் பாதுகாத்தலாகிய சரியை வழிபாட்டையும் மேற்கொண்ட சண்டேசுர நாயனார், 63 நாயன்மார்களுள் ஒருவர். அவருக்குத் திருக்கோயில்களில் சந்நிதியும், வழிபாடும் வகுக்கப்பட்டுள்ளன. சிவாலய பூசை சண்டேசுரர் வழிபாட்டுடன் முடிவடைகிறது. சிவதரிசன பலனைத் தருபவர் சண்டேசுர நாயனார். அதனால், நாம் சிவதரிசனம் முடித்து, சண்டேசுரருக்கு முன்னால் நின்று வணங்கி, மூன்று முறை கைதட்டி, சிவபூசையின் பயனைத் தந்தருளும்படி வேண்டிக் கொள்ள வேண்டும்.

தீவிர பக்தியாளர்களை இறைவன் தம்முடைய ஆணைக்குட்படுத்தி, அவர்களை முதன்மைப்படுத்துவார் என்பதனை, சண்டேசுர நாயனார் வரலாற்றினூடாக அறிந்தீர்கள். நீங்களும் இறைவன் மீது பக்தி கொண்டு நன்மையடைய வேண்டும்.

இலவச விநியோகத்திற்காக

01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. விசாரசருமர், பசுக்களை மேய்க்கும் பொறுப்பை ஏன் ஏற்றுக் கொண்டார்?
2. 'நால்வகை மார்க்கங்களில் ஒன்றான கிரியை நெறி மூலம் இறைவனை அடைந்தவர் சண்டேசுரர்' - என்பதற்கு இப்பாடத்தில் காணப்படும் சான்றுகளைத் தருக.
3. எச்சதத்தன் செய்த சிவத்தீவினை யாது? அது எவ்வாறு நீங்கியது?
4. விசாரசருமரின் தீவிர சிவபக்தியைக் காட்டும் சம்பவத்தைக் குறிப்பிடுக.
5. இறைவன், விசாரசருமருக்கு அருள்புரிந்த விதத்தினை சுருக்கமாக எழுதுக.

செயற்பாடு

1. விசாரசருமர் பசுக்களிடம் அன்பு கொண்டவர். என்பதனை விளக்கும் காரணங்களை இனங்கண்டு, வகுப்பறையில் முன்வைக்குக.
2. சண்டேசுரரை வழிபடும் முறையினைச் செய்து காட்டுக.

பாடச்சுருக்கம்

- விசாரசருமர் சிவபக்தி மிக்கவர்; சிவபூசை செய்து இறைவனை வழிபட்டவர்.
- சிவத்தீவினை செய்தல் தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகும்.
- விசாரசருமர் தீவிர பக்தியுடன் இறைவனை வழிபட்டு, சண்டேசுரர் பதவியையும் வேறு பல சிறப்புகளையும் பெற்றார்.

இலவச விநியோகத்திற்காக